1972 ஆகஸ்ட் 22]

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, குடும்ப நலத் துறைக்கு தனிப் பிரிவு ஏற்படுத்தி அந்த இயக்கத்தைத் தீவிரப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கேள்வி கேட்கின்ற உறுப்பினர் போன்றவர்கள் தான் இத்துறையில் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

Blood Banks

* 185. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that there is an acute shortage of blood in the Blood Bank in the Thanjavur Medical College Hospital and Rajah Mirasdar Hospital, Thanjavur; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in the matter?

குருதி சேமிப்பு நிலையங்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் ராஜா மிராசுதார் மருத்துவமனையிலும், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலும் உள்ள குருதி சேமிப்பு நிலையங்களில் குருதி மிகவும் பற்றாக்குறையாக இருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி யோடு இணைக்கப் பெற்றுள்ள குருதி வங்கியில் குருதியிருப்புச் சற்றுக் குறைந்துள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனல் அரசினர் இராசா மிராசுதார் மருத்துவமனையில் குருதியிருப்புக்குறைவு இல்லை.

(இ) இலவசமாக ரத்ததானம் பெறுவதற்கு, ரொட்டரிக்கிளப், அரிமாக் கழகம் ஆகிய இவற்றில் தலைவர்களும் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளும் உதவிசெய்யுமாறுக் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கின்றனர்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ராஜா மிராசுதார் மருத்துவ மனையில் தேவையான அளவுக்கு குருதி இல்லை என்பதை அங்கே தலைவராக இருக்கிறவர் பத்திரிகையில் எழுதி இருக்கிருர். ஒரு தினசரி பத்திரிக்கையில் பிப்ரவரி மாதம் என்று நினைக்கிறேன், பெரிய அளவில் வந்திருக்கிறது. குருதி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கொடுப்போர்க்கு பத்து ரூபாய் என்று நிர்ணயித்து யாரும் வராத காரணத்தால் ரூ. 50 என்கிற அளவுக்கு கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அது மட்டுமல்ல, அங்கு இருக்கிற ஒரு அதிகாரியே இந்த ஊழலுக்குக் காரணம் என்றும் சொல்லப்படுகிறது. இது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட கேள்வி எழுப்பப்படுகிறபோது அந்தக் கேள்விக்கு விடை அந்தத் துறையிலுள்ளவர்களிடம் கேட்டு தெரிவிக்கிறோம். இப்போது, ஊழல் நடைபெறுகிறது என்று குறிப்பிட்டார்கள். இதைப் பற்றி உறுப்பினர் அறிந்திருக்க முடியும். அதை உறுப்பினர் முன்கூட்டியே தெரிவித்திருந்தால் அந்த அடிப்படையில் நாங்கள் விசாரணை நடத்தவோ, அது பற்றிக் கேட்டறிந்து கூறவோ இயலும். அரசினர் மருத்துவ மனையில், பொதுவாக, நகர மக்களுக்கு அது மிக அருகாமையில் இருக்கிற காரணத்தால் குருதி கொடுக்க முன்வருகிறார்கள். ஆனால் மருத்துவக் கல்லூரி மிக தூரத்தில் இருக்கிற காரணத்தால் அங்கு குருதி கொடுக்க பலர் முன்வருவதில்லை. சிறைச்சாலையில் உள்ளவர்களிடமிருந்து குருதி பெற்று, ஓரளவு தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடிகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அண்மையில் திருச்சி செண்டிரல் ஜெயிலிலிருந்து குருதி கொண்டுவருவதற்குரிய வான்களைத் தயாரித்து குருதியைக் கொண்டு வர அரசு நடவடிக்கைகள் எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள், முன்னர் புதுக்கோட்டையை தெரிவித்தார்கள். இப்போது திருச்சியை தெரிவித்திருக்கிறார்கள். அப்படி குருதி கொண்டுவர வழிகள் இருக்கின்றனவா என்று தெரியவில்லை. அங்கே இருந்து கொண்டுவருவதாக இருந்தால் கொண்டு வந்த சேர்ந்த மூன்று நாட்களுக்குள் பயன்படுத்தப்பட வேண்டும். இல்லையென்றால், ஃபிளாஸ்மா செய்வதற்குத்தான் பயன்படுத்தப்பட வேண்டும். தேவைப்படுகின்ற போது புதுக்கோட்டைக்கோ, திருச்சிக்கோ சென்று கொண்டுவருவது என்பது இயலாத காரியம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, செண்டிரல் ஜெயிலிலிருந்து கைதிகளிடமிருந்து எடுக்கப்படுகிற குருதிக்கு பணம் கொடுக்கப்படுகிறதா ? அல்லது இலவசமாக கைதிகள் கொடுக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, வெளியிலுள்ளவர்கள் குருதி கொடுப்பதாக இருந்தால் அவர்களுக்கு இவ்வளவு தொகை என்று கொடுக்கப்படும். சிறையில் இருப்பவர்கள் கொடுப்பார்களேயானால், அவர்கள் சிறையில் தங்கி இருக்க வேண்டிய நாட்கள் கொஞ்சம் குறைக்கப்படும். இது என்னுடைய சொந்த அனுபவம் கூட.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்